புதினப்பத்திரிகையாய்ப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)
ஆவணிமீ உஉ
[illegible]

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஞ 1-க்கு	ரு	5-00
இலங்கை, இந்தியா:	,, ரு.	8-00
சோவலாப்பகுதி:	,, ரு	9-00
தனிப்பிரதி:		சதம் 5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரு. 9-00
,,	அரைக்கலம்	ரு 4-50
,,	கால்கலம்	ரு 3-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சஉ. } யாழ்ப்பாணம்:—விபவஹூ ஆவணிமீ ருஉ, (1928 ஆகஸ்ட் 20) திங்கட்கிழமை. { இலக்கம்—கரு.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
  சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
  பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
  பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
  மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாஞ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, உருவருஷத்தன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டியே.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

இலங்கை
ஆயுர்வேத வைத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுர்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுர்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (சொறஸ்போண்டன்கோஸ்) விதிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றுப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள ரசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
(Q. 106.) தலைவர்.

சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் அரிதஸ்கலிதமென்னும் ஓர்வித நோயினால் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினால் (Malaria fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேகவெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினாலும் பலஈனத்தினாலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

1	ரூத்தல்	மருந்து	ரூபா	10	00	வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.
½	,,	,,	,,	5	00	
¼	,,	,,	,,	3	50	

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர், டக்டர், எம் என். பிள்ளை ஏ. எம். ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான பிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயாரிசெய்யப்பட்டது மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாண மானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்று விபரமாக எழுதினால் எங்களால் தீர்க்க முடியுமானால் அதற்குத்தகுந்த மருந்தை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது நிராதரோகமாயிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொடுவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts முத்திரையும் அனுப்பினால் விபரமாகப் பதில்எழுதப்படும்

(Q 104)

வேலணை, சரஸ்வதி வித்தியாலயத் தமிழ் உயர்தரவகுப்புக்கள்.

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீக்ஷைக்கும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பிரவேச பரீக்ஷைக்கும் தோற்றுவார்க்கு வாய்ப்புடைத்தாக வேறோர் பிரவேச வகுப்பும், பாலபண்டித பரீக்ஷைக்குத் தோற்றுவார்க்கு ஏற்றதாக வேறோர் பாலபண்டித வகுப்பும் எமது வித்தியாலயத்தில் அமைத்து நடாத்தப்படும்.

பிரவேச வகுப்பினர்க்குக் கிழமைதோறும் மூன்றுநாளும், பாலபண்டித வகுப்பினர்க்குச் சனிக்கிழமைதோறும் கல்வி கற்பிக்கப்படும்

கற்பிக்கும் ஆசிரியர்:—
வித்வான் ஸ்ரீமத் சுப்பையபிள்ளை
தமிழாசிரியர் ,, ம. தம்பு
,, இ. மருதையனார்

இவ்வகுப்புகளிற் சேர்ந்து கற்க விரும்புவார் 1928-ம் ஆ ஆகஸ்டு மீ 20உக்கு முன் தமது விண்ணப்பப் பத்திரத்தை மேற்குறித்த வித்தியாலயத் தலைமையாசிரியர்க்கு அனுப்பக் கடவர்.

வித்தியாரம்ப நாள் பின்னர் அறிவிக்கப்படும். குன்றும் விபரமறிய வேண்டுவோர் மேற்காட்டினார்க் கெழுதி அறிந்து கொள்க. பிறவூர்ப் பிள்ளைகட்கு விடுதியமைத்துக் கொடுக்கப்படும்.

விலாசம்
தலைமையாசிரியர்
'சரஸ்வதி'
வேலணை.

இங்ஙனம்,
வை. விஜயரத்தினம்.
1—8—1928

குறிப்பு:—இருமாதவேதனம் சேரும்போழுது கொடுபடல் வேண்டும். வேதன அளவு மாணவர் தொகை யறிந்தபின்னரே நிச்சயிக்கப்படும்.

(Mis. 1269)

யாழ்ப்பாண
ஐக்கியவியாபாரசங்கம்
லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

கௌரவ லேவர் பொன்
இராமநாதனவர்கள்
இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா2 அணா 8.
2. பகவற்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(H 61)

நோவினால் வருந்துவோர்!

முதன் முதல் நினைப்பது ஏதாவது தைலத்தைப் பற்றியே அதாவது சீக்கிரத்தில் சுகங் கொடுக்கக் கூடிய தைலம். அதுதான்.

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

ஆதித் தைலமும், இந்த நோவுகளை நிச்சயமாய்க் கண்டிக்கக் கூடியதும் இதுவே.

LITTLE'S
ORIENTAL BA

தலை வலி
நரம்பு வலி
இல் வாய்வு
தடைப் பிடிப்பு
வாதம்
சளுக்கு
முதலிய நோய்களுக்கு

இதிற் கொஞ்சந் தடவ நிரம்பிய சுகங் கிடைக்கும்.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

1—28. Litts Oriental Balm and Pharmaceutical L. M. a

(Y. 51.)

சைவ அநாதப் பிள்ளைகள் சாலையும் மாணவர் இல்லமும்.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அநாதப்பிள்ளைகள் எல்லோரும், தமிழ் நூர்தார்தரம் அல்லது அதற்குமேற்பட்ட வகுப்புக்களிற் சித்தியடைந்த ஏனைய மாணவர்களும் இச்சாலையிற் சேரலாம்.

இப்பிள்ளைகள் திருநெல்வேலி முத்துத்தம்பிவித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கப்படுவர்.

பிரதான நோக்கம்.

1. தராதரம் பெற்ற உபாத்தியாயராக்கல்.
2. கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்குத் தகுதி உடையவராக்கல்.
3. பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டிதபரீட்சைகளுக்குத் தகுதியுடையவராக்கல்.
4. சமயத்தொழில் நெசவுத்தொழில் முதலிய கைத்தொழில்களிற்தேர்ச்சியுடையவராக்கல்.

அநாதப்பிள்ளைகளுக்கு வேதனமின்றி உணவளிக்கப்படும். ஏனையோர் விடுதிச்செலவில் ஓர் பகுதியாவது கொடுத்தல்வேண்டும்.

சி. சபாபதிப்பிள்ளை. திருநெல்வேலி,
ச. இராசரத்தினம், சைவவித்தியாவிருத்திச்சங்கம்.

(M. 69.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹ ஆவணிமீ ௩௨ திங்கட்கிழமை

ஆராய்வற்ற பேச்சு.

சென்றவாரம் வட்டுக்கோட்டை அமரிக்கன் மிஷன் கல்லூரியிற் பழைய மாணவரின் வருடாந்தக் கூட்டம் நிகழ்ந்தபொழுது அறித்த கல்லூரிப் பழைய மாணவருளொருவராகிய கௌரவ மிஸ்ரர் பாலசிங்கமவர்களும் ஆங்குச் சமூகஞ் செய்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் சுருக்கம் சென்றவாரம் வெளிவந்த கொழும்புத் தினவர்த்தமானிகள் சிலவற்றிற் காணப்படுகின்றது. பேசிய விஷயம் இலங்கை அரசியற் திருத்தத்தைப்பற்றியதாம். மிஸ்ரர் பாலசிங்கமவர்களின் பேச்சிற் சில ஆராய்வற்றனவாகவும் உண்மைக்கு மாறானவையாகவுங் காணப்படுகின்றன.

டெண்கள் சம்மதஞ் சொல்லும் விஷயத்தில் மிஸ்ரர் பாலசிங்கமவர்கள் அது நல்லதென்றே கருத்துக்கொள்ளுகின்றார். யாழ்ப்பாணத்துள்ள தமிழ் மக்களின் புராதன நிலையைப்பற்றிப் பேசுமிடத்து முருங்கைக்காய், வெண்காயம், எலுமிச்சம்பழம், தோடம்பழம் (நாரத்தம்பழம்) மிளகாய் என்னுமிவைகளையும் இதா பொருள்களையும் தமிழ்மக்கள் இருநூறு முந்நூறு வருடங்கட்கு முன்னர் அறிந்திருக்கவில்லையென்றும் அவைகளெல்லாம் பிற்காலத்தில் அந்நியநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டன வென்றுங் கூறுகின்றார். உடை விஷயத்திலும் தமிழ் மக்களுக்கு இதுதான் உடையென ஒரு நியதியிருக்கவில்லையென்றும், தமிழ் மக்கள அணியும் தலைப்பாகையும் இஸ்லாமானவர்களைப்பின்பற்றி அணியப்படுகின்றதென்றுங் கூறுகின்றார். தமிழர்களாற் காற்சட்டை தொப்பியணிவது பிழையெனச் சொல்வது முழுதுந் தவறென்று மிஸ்ரர் பாலசிங்கம் பகர்கின்றார். காலத்திற்குத் தக்கபடி உடை உணவு நடை முதலியவைகளை மாற்றிக்கொள்வதும் கைக்கொள்வதும் ஆவசியகஞ்செயவேண்டியவைகளென்று மிஸ்ரர் பாலசிங்கம் தெரிவிக்கின்றார்.

தமிழ் மகளிர் விஷயமாக மிஸ்ரர் பாலசிங்கமவர்கள் கூறியவைகளே மி. வேடிக்கையானவைகளாம். இலங்கையிலேயுள்ள பெண்கள் (அமிரோட்பிய பெண்கள் இப்பொழுது செய்துகொள்வது போல்) தங்கள் கூந்தலைக் கத்தரித்துக் கொண்டார்களேயானால் உத்தமமாகுமென்றும், மயிரைக் கத்தரித்தலே சுகத்திற்கும் புனிதத்திற்கும் ஏதுவாகுமென்றுஞ் செப்புகின்றார். மேலும் ஒரு பெண் ஸ்நானஞ் செய்தபின் தன் கேசத்தை உணர்த்த எவ்வளவு பாடுபடுகின்றாள் என்று மிஸ்ரர் பாலசிங்கமவர்கள் பெண்கள் பொருட்டுப் பரிதாபப்படுகின்றார். இப்படிப்பட்ட அபிப்பிராயங்களையுங் கொள்கைகளையும் வெளியிடுதற்கு மிஸ்ரர் பாலசிங்கமவர்களுக்கு ஆதாரமென்ன வென்பதை அவர் உடனே சொல்லியிருந்தால் நல்லாயிருக்கும். அவருடைய பேச்சிற் சனங்களுக்கு நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கும். மிஸ்ரர் பாலசிங்கத்தின் நுண்ணறிவையும் இங்குள்ளார் மெச்சியிருப்பர்.

மிஸ்ரர் பாலசிங்கம் போன்ற பொறுப்புடைத்தவர்கள் தாம் பேசும்போது அவதானமாகப் பேசுதல் வேண்டும்; பேசிவிட்டு யோசிப்பதைக் காட்டிலும் சமய விஷயம் சாதிவிஷயமாய்ப் பேசும்போது யோசித்துப் பேசுவது நன்று. தமிழருக்கு வெங்காயந் தெரியாது, முருங்கைக்காய் தெரியாது, சீலையுடுக்கத் தெரியாது, மற்றவர்களைப்பார்த்து இவைகளைச் சில காலத்திற்கு முன்தான் அநுசரிக்கத் தொடங்கினார்கள் என்று பிரமாணமின்றி வாயில்வந்ததைச் சொல்லுவது இலகுவான காரியம். இப்பேச்சு நட்பமற்றதாயினும் இதனை நிராகரித்து ஆதாரங் காட்டுவதே கஷ்டமான காரியம். வெங்காயம் முருங்கைக்காய் தோடம்பழம் முதலாம் பொருள்களின் குணங்களும் பேதங்களும் தமிழிலுள்ள வைத்தியநூல்களிலும் பிறவற்றிலும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இற்றைக்கு 1500 வருடங்கட்கு முன் அதாவது நாலாம் நூற்றாண்டில் இந்தியாவிற்குவந்த வாஹெயின் (Fahien) எனப்படும் சீனயாத்திரிகர் செந்தமிழ் நாடாகிய மதுரையைப்பற்றிச் சொல்லுமிடத்தில் அங்குள்ளவர்கள் வெங்காயம் உள்ளி என்னுமிவைகள் (மாமிசத்தின் சத்துடையனவென்பதுபற்றி) இவைகளை ஒதுக்கிவைத்திருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றார். இதனை வின்ஸன்ற் A. சிமித் என்பவர் எழுதிய இந்தியாவின் புராதன சரித்திரம் என்னும் நூலிற் காணலாகும். இன்னும் இதற்கு எத்தனையோ ஆதாரங்கள் எடுத்துக் காட்டலாகும். விரிவஞ்சி விடுக்கின்றோம்.

இனி, பெண்கள் மயிரைக் கத்திரிக்கும் விஷயத்தில் இவ்வார்த்தையைக் கேட்ட பெண்களே நகையாடுகின்றார்கள்; மிஸ்ரர் பாலசிங்கமவர்களின் பேச்சைக் கைம்மைகளாகிய பார்ப்பனப் பெண்கள் மாத்திரம் விரும்புவார்கள். பெண்களுக்குக் கூந்தல் அழகைத் தருவதோடு அமையாது மங்கலமானதுமாம். மேலும் பெண்களுக்குக் கூந்தலிருப்பதனால் அவர்கள் அதனை உலர்த்திக்கொள்ளக் கஷ்டப்படுகின்றார்களென்று மிஸ்ரர் பாலசிங்கம் அநுதாபப்படுகின்று போற் புலப்படுகின்றது. பெண்களுக்குப் பெருங் கஷ்டத்தைத் தருவதும் புநர்சன்மமென்று சொல்லத்தக்கதும் பிரசவ வேதனையாகும். இந்த வேதனையையும் தவிர்த்தற்கான மார்க்கத்தையும் மிஸ்ரர் பாலசிங்கமவர்கள் உபாயஞ்சூழ்ந்து வெளியிடுவர் போலும்.

> "சொல்லுதல்யார்க்குமெளிய, அரியவாம்
> சொல்லியவண்ணஞ்செயல்"

என்றபிரகாரம் எதனையும் சொல்லுவது இலகு சொன்னபிரகாரந் தாமேயும் செய்வதல்லவா அரியகாரியம். கதிர்காம யாத்திரை விஷயத்திலும் மிஸ்ரர் பாலசிங்கமவர்கள் முன்னொருமுறை சட்டநிரூபண சபையில் இங்கவிதமான விபரீத வார்த்தைகள் பேசியுள்ளார். இனிமேலாயினும் அவர் தமது நவீன கொள்கைகளை வெளியிடா தொழிவரேல் அதனால் அவருக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் நன்மையுண்டாம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில்.

இத்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் இன்று துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறும். இங்குள்ள சைவ சன்மக்களெல்லாரும் மிக்க ஆசாரசீலராய் மேற்படியாலயத்திற்குச் சென்று விரதத்துடன் அங்கப்பிரதக்ஷணம் உற்சவதரிசனம் முதலியன செய்து வருகின்றார்கள். சுவாமிதரிசனஞ் செய்யச் செல்லும் அன்பர்கள், மேற்படி கோயிலின் வெளிவீதியும் அங்கப்பிரதட்சணஞ் செய்தற்கு இடமாகுமென்பதைச் சிந்திந்து. வெற்றிலை பாக்குண்டு உமிழ்தல் அசுசிப்படுத்தல் முதலிய அநாசாரங்களைத் தாங்கள் செய்யாது விடுதலோடு அமையாது அப்படிச் செய்வோர்களையும் புத்திசொல்லித் தடுத்தல்வேண்டும்.

விளம்பரம்.

வண்ணார்பண்ணை கிழக்கு சிவன்கோயிலடியில் அடைவுபிடித்து வந்த சின்னத்தம்பி துரையப்பாவாகிய நான் இந்த ஆவணி முதலாந் திகதி (16—8—28) தொடக்கம் வண்ணடை கிழக்கில் நாவலர்துறை ரோட்டில் இருக்கும் எனது வீட்டில் அடைவுபிடிப்பதாக முந்திய விலாசத்தை மாற்றியிருக்கிறேன்.

வண்ணைகிழக்கு, இப்படிக்கு,
13-8-28. சி துரையப்பா.

(M: 1275)

சிவஞான போதம்.

(முதற்பாகம்)

வண்ணை, ஸ்ரீ வை. இராமநாதன் அவர்களால் அறுவைதித்துப் பிரகடனஞ்செய்யப்பட்டது.

[40-ம் புத்தகம், 1?-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—௩.

உளது இலதென்றலின், எனதுடலென்றலின், ஐம்புலன், ஒடுக்கம் அறிதலின், கண்படில் உண்டி வினையின்மையின, உணர்த்த உணர்தலின், மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

காண்காம்படம் —உயிர் ஐம்பொறிகளின் வேறு.

உடல் அறிய மாட்டாதென்றும், உடல் வேறு உயிர் வேறு என்றே வழங்கும் என்றும் கூறினோம். ஆனால் உடலின கண் உள்ள ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி அவ்வாறல்ல. இவைகள் ஞானேந்திரியங்களெனப்படும். இவைகள் அறியும்; கண் காணும், காது கேட்கும், மற்றவைகளும இப்படியே இவைகளை 'என பொறி என வழங்குதலும் இல்லை ஆதலால் இவைகளை உயிர் என்றுசொல்லலாகாதோ? ஆராய்வாம். 'என் பொறி' எனப் பொதுவாய் வழங்காவிடினும் 'என் கண்', 'என் செவி, எனப் பிரித்து வழங்குதல் உண்டு. ஆதலால் வழக்கின்மை பற்றி இப்பொறிகளதாமே உயிராகுமென்று கொள்ளக்கூடாது. இப்பொறிகள் அறிவனவா என்பதே கவனிக்கவேண்டியது.

ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு விஷயத்தையே அறியும். கண் அறிவதைக் காது அறிவதில்லை. மற்றப் பொறிகளும் அப்படியே. ஆதலால் இவ்வைம் பொறிகளையும் ஓரேஉயிர் என்று சொல்ல வழியில்லை. இவ்வைம்பொறிகளும் ஐந்து வேறு உயிர்களாய் உடலில் தங்கியிருக்கலாம் என்பதும் பொருத்தமற்றது அவ்வாறு அறியில், காண்டலறிவு கேட்டலறிவு முதலியன கண் காது முதலியனவற்றில் தனித்தனி நிகழ்வதை நம்மனுபவத்தில் அறிவதுபோல, யான் கண்டேன், யான் கேட்டேன் என்னும் அறிவும் அக் கண் காது முதலியவற்றில், தனித்தனி நிகழ்வதை நம்மனுபவத்தில் அறிதல்வேண்டும். அப்படியில்லையே. யான் கண்டேன் முதலிய அறிவு, இப்பொறிகளின் வேறாகிய ஒன்றினிடத்தேயே நிகழ்வதை அனுபவத்தில் நாம் அறிகிறோம். ஆதலால் இப்பொறிகளைக் கொண்டறிவது இவற்றின் வேறான ஒரு பொருள் என்றே முடியும். இதுவே உயிர். இக்கருத்தையே இச்சூத்திரம் "ஐம்புலன் அறிதலின் ஆன்மா (வேறு) உளது" என இயைபுற உணர்த்தியது.

ஈண்டு ஐம்புலன் என்பது ஐம்பொறிகளால் அறியப்படும் விஷயங்களை உணர்த்திநின்றது.

ஐந்தாம்படம்—உயிர் சூக்கும உடம்பின் வேறு.

ஐம்பொறிகள் உயிர் அல்லவென்றும், அவைகளைக் கொண்டு அறிவதாகிய வேறொன்றே உயிர் எனத் துணிந்தோம். இனி, இவ்வைம்பொறிகளும் தொழிற்படாதவிடத்து அறிவு நிகழுமா? ஆராய்வாம்.

நனவில் (விழிப்பில்) மாத்திரம் இவ்வைம்பொறிகளும் தொழிற்படுமென்பதை அறிவோம். ஆனால் எப்பொழுதும் நாம் நனவில் இருப்பதில்லை. சிலவேளைகளிற் கனவிலும் இருப்போம். அக்கனவில் இப்பொறிகள் தொழிற்படவில்லை. என்றாலும், சில உருவங்களைக் காண்பது போலவும், சில சத்தங்களைக் கேட்பது போலவும், சில விஷயங்களை நுகர்வது போலவும், பிறிதுமாதிரியாயும் கனவு காண்பது உண்டு. [இக்கனவிற் காணும் விஷயங்கள் அக்கனவிலேயே எதிர்ப்படும் விஷயங்களா, அன்றா என்பது வருஞ்சூத்திரத்தில் விளக்கப்படும்] அது எப்படியிருந்தபோதிலும், கனவில ஒருவித அறிவு நிகழ்ச்சி உண்டு என்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வறிவு நிகழ்வது எதன்கண்? அதன்கண்ணின்று அறிவது யாது? ஆராய்வாம்.

கனவிற் கன்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள் ஒடுங்கினும் அவற்றின் காரணபூதமாகிய அகங்காரமும் உடன் ஒடுங்கவில்லை அப்படியே இத்தேகத்திலுள்ள பஞ்சபூதங்கள் தொழிற்படவில்லையென்றாலும் அவற்றின காரணபூதங்களாகிய தன்மாத்திரைகளும் தொழிற்படா என்பது முடிபல்ல. இத்தன்மாத்திரைகள் (5) அகங்காரம் (1) அதனோடு சம்பந்தப்பட்ட மனம், புத்தி (2), ஆக 8 கருவிகளும் கனவில் ஒடுங்காது நின்று தொழிற்படுகின்றன இவ்வெட்டுக் கருவிகளாலாய உடம்பே சூக்கும உடம்பு. இச்சூக்கும உடம்பினிடத்தே கனவில் அறிவு நிகழுகின்றது. இனி அவ்வுடம்பினின்று அறிவது எது என்பதை ஆராய்வாம். (வரும்.)

ஞானேந்திரியங்கள்:—சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம்—ஐ.

கருமேந்திரியங்கள்:—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம்—ஐ.

தன்மாத்திரைகள்:—சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம்—ஐ.

குறிப்பு:—இவைகள் (5)பூதங்களுடனும் (4) அந்தக்கரணங்களுடனுங் கூடி ஆன்மதத்துவம் 24 ஆகும்.

சுரோத்திரம்=காது.
துவக்கு=மெய்.
சக்ஷு=கண்.
சிங்குவை=வாய் (நாக்கு).
ஆக்கிராணம்=மூக்கு.

காலநிலை.

இன்று அதிகாலையில் இங்கே சிறு மழைபெய்தது மழைக்கோலங் காணப்படுகின்றது

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் புதிய மணி.

சில காலத்திற்குமுன் இக்கோயிலுக்கென வருவிக்கப்பட்ட பெரிய மணி, அதற்கெனப் புதிதாயமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரத்திற் சென்ற வெள்ளிக்கிழமை ஏற்றப்பட்டு இன்று (20-8-28 காலை முதன்முதல் அடிக்கப்பட்டது.

கும்பாபிஷேகம்.

வண்ணார்பண்ணைச்சிவன்கோவில் மூன்றும் பிரகாரத்திற் கனித்தாக மேற்குப்புறத்திலுள்ள ஞானவைரவசுவாமிகோயிலில் ஞானவைரவ சுவாமிக்கும் விநாயகர் கதிர்வேற்பெருமான்என்னும் இம்மூர்த்திகட்கும், வண்மேற்கு ஆயுர்வேத வைத்தியர் ஸ்ரீ க சிற்றம்பலமவர்களால், புதிதாக அமைக்கப்பெற்ற கோயிலில் சம்புரோட்சண கும்பாபிஷேகம் இன்று (20-8-28 காலை விதிப்படி வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.

வலிகாமம் வடக்குப்பகுதி நொத்தாரிஸ்.

சாவகச்சேரியிலுள்ள ஸ்ரீ வி. சா. சுப்பிரமணியம் அவர்கள் வலிகாமம் வடக்குப்பகுதிக்குத் தமிழ் நொத்தாரிஸ்ஸாகக் கடமைபார்க்கும்படி தேசாதிபதிஅவர்களால் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவருடைய கந்தோர்கள் காங்கேசன்துறையிலும் வீமன்காமத்திலுமிருக்கும்.

அடிச்சுவட்டினால் அகப்பட்டான்.

மண்கும்பானில் ஒருவருக்குரிய தோட்டமொன்றில் 20 செம்மறி ஆடுகள் ஒரு பட்டிக்குள் அடைக்கப்பட்டிருந்தன. முகம்மது மீராசாய்பு என்னும் ஒரு மகமதியன் அவ்வாடுகளைக் களவாடிப் பண்ணைத்துறைவழியாக யாழ்ப்பாணங் கொண்டுவந்துவிட்டான். பட்டிக்காவற்காரன் எழுந்து பார்த்தபொழுது ஆடுகளைக் காணாது அவைகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்று துறையில் ஆடுகளையும் எதிரியையும் பிடித்தனன் இந்த எதிரிமீது வழக்குத் தொடரப்பட்டு எதிரிக்கு ஒருவருடக் கடூழியச் சிறை விதிக்கப்பட்டது.

மோட்டரதப் பெருக்கம்.

சென்றஜூன்மீ இலங்கையில் இறக்குமதியான தொகையைப் பார்க்கிலும், சென்ற ஜூலை மாதத்தில் 251 மோட்டரதங்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

சட்ட நிரூபண சபை.

சட்டநிரூபண சபைக்கூட்டம் இத்தமீ 23உ வியாழக்கிழமை கொழும்பில நடைபெறும். அடுத்த செப்டெம்பர்மீ 27உ வியாழக்கிழமை, இலங்கை அரசியல் விசாரணைச்சங்கத்தார் அனுப்பிய அறிக்கைப்பத்திரத்தைப் பற்றிய விவாதம் மேற்படி சபையில் நடைபெறும்.

5 ரூபா முத்திரை.

இப்பொழுது வருவிக்கப்பட்ட முத்திரை குத்தும் யந்திரத்தைக்கொண்டு 5 ரூபா முத்திரைகள் புதினவாக அச்சிட அரசாட்சியார் ஒழுங்கு செய்கிறார்கள். இந்த முத்திரை இரண்டு நிறமுடையதாக விருக்கும். போலி முத்திரைகளைக் களவாக அச்சிடுதல் இனிமேல் கஷ்டமாயிருக்குமென நம்பப்படுகிறது.

புகைரதப்பகுதி.

பிரயாணிகளுக்காக இப்பொழுது இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட வண்டிகளைப் புகைரதப்பாதையில் ஓடத்தக்கனவாகச் செய்வதற்கு வேண்டிய வேலைகள் இப்பொழுது மருதானையில் நடைபெறுகின்றன. இவ்வண்டிகளிற் சில சென்றுபோன யாத்திரா காலத்தில் உபயோகிக்கப்பட்டன. இவைகள் தற்கால மாதிரிக்கேற்றவிதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே இறக்குமதியான வண்டிகளைப் போன்றனவாக இலங்கையிலுஞ்செய்யப் புகைரதப்பகுதியிலுள்ள என்ஜினீர் தொடங்கியிருக்கின்றார். அக்டோபர் மாதத்தில் 60 வண்டிகளும் சில புதிய புகைரத யந்திரங்களும் ஓடவிடப்படுமெனத் தெரிகிறது.

கட்டுக்குருந்தையில் நிகழ்ந்த புகைரத விபத்து.

கட்டுக்குருந்தையில் சென்ற மார்ச்சுமீ 12உ நிகழ்ந்த புகைரதவிபத்தில் உயிரிழந்தோரினதும் காயமடைந்தோரினதும் சுற்றத்தார் அவ்விடத்தில் ஓர் ஞாபகசின்னம் அமைக்கவேண்டுமென அரசாட்சியாருக்குத் தெரிவிக்க முயற்சிசெய்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசாட்சியார் தலையிடாதொழிவரேல், ஷெ சுற்றத்தாரே தங்கள் பொறுப்பில் அந்த ஞாபகசின்னத்தை அமைக்க உத்தேசிக்கிறார்கள். இலங்கைப்புகைரத வீதியில் நிகழ்ந்த விபத்துக்களில் இதுவே மிகவும் அபாயகரமானது. இதில் உயிரிழந்தோர் 27 பேரும், காயப்பட்டோர் 40 பேரும் ஆகும்.

ஸ்ரீ ஆனந்த வடிவேலாயுத சுவாமி ரதோற்சவம்.

ஊவாமாகாணத்தலைநகரமாகும்வதுளையிலே, கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்த வடிவேலாயுத சுவாமிக்கு, நிகழும் விபவஞு ஆவணி மாதம் ௧௨உ (27--8--28) திங்கட்கிழமை அலங்கார அபிஷேக ஆராதனைகளும், அடியார்களுக்கு அன்னதானமும், ௧௩உ (28-8-28) செவ்வாய்க்கிழமை பகல் உபயஸ்தலமாகிய செல்வவிநாயகர் மடாலயத்திற்கு ரதாரூடராய் எழுந்தருளும் உற்சவமும், ௧௪உ (29-8-28 புதன்கிழமை ஷெ மடாலயத்திற்றானே அபிஷேக ஆராதனையும், அன்னதானமும், திருவூஞ்சலும், ௧௫உ (30-8-28) வியாழக்கிழமை ரதாரூடராய் அம்மடாலயத்திலிருந்து தமது திருக்கோயிலுக்கு எழுந்தருளும் உற்சவமும் நடைபெறுமென அறியலானோம்.

மிதக்கும் துறைமுகம்.

லண்டனிலிருந்து சிங்கப்பூருக்குக் கொண்டுபோகப்படும் மிதக்கும் துறைமுகம் சுவெஸ் கால்வாயைக் கடந்து விட்டது. கால்வாய் வழியாகச் செல்லும்போது இருமருங்கிலும் பிரிட்டிஷ் படைகள் அணிவகுத்து நின்றனவாம். சிங்கப்பூர் போய்ச்சேரச் செலவாகும் இருபதினாயிரம் பவுனில் பதினாயிரம் பவுன் கால்வாயைக்கடப்பதிலேயே செலவாயிற்றாம்.

முதுகில் மரணசாதனம் எழுதியவன்.

லண்டனில் ஒரு மனிதன் முதுகில் மரணசாதனம் எழுதிக்கொண்டிருக்கிறான். இச்சாதனம் 200 வார்த்தைகள் அடங்கியதாம். முதலில் இதை அவன் ஒரு காகிதத்தில் எழுதிப் பின்னர்ப் பச்சை குத்துமிடமொன்றுக்குச் சென்று அதை முதுகில் எழுதச் செய்தானாம். ஐந்து மணிநேரத்தில் இந்தவேலை முடிந்தது. சாட்சிகளும் கையொப்பமிட்டனர்.

250 வயதுள்ள ஒரு கிழவர்.

சீனாவில் கெய்சின் என்னும் கிராமத்தில் லிசிங்யூன் என்னும் பெயர்கொண்ட 250 வயதான கிழவர் இருக்கிறாராம். அவர் இன்னும் உடலுறுதியுடன் இருக்கிறார். அவர் மனத்தை அமைதியுடன் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். ஆமையைப்போல உட்கார வேண்டுமென்றும், மாடப்புறாவைப்போல நடக்கவேண்டுமென்றும், நாயைப்போல உறங்கவேண்டுமென்றும் கூறுகிறார். அவர் ஐம்பது வயது ஆண்பிள்ளை போலவேயிருக்கிறார். அவர் பதினொரு முறை கலியாணஞ்செய்து, 180 பேரப்பிள்ளைகளுடன் இருக்கிறார். அவர் நாள்விதம் நாற்பது மைல் நடக்கிறார். கண்பார்வை கூர்மையாயிருக்கிறதாம்.

முதல் வக்கீல் மாது.

ஆகஸ்டு ௧௩-ம் தேதி, சென்னை ஹைக்கோர்ட்டு பிரதம நீதிபதி தேவதாஸ் அவர்களின் குமாரத்தி ஸ்ரீமதி சீதாவடிவு தேவதாஸ் ஓர் வக்கீலாகப் பதிவுசெய்யப்பட்டார். நீதிபதியின் மனைவியும், பெண்மக்களும் விஜயஞ்செய்திருந்தனர். கோர்ட்டில் ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தனர். இக்கோர்டில் முதலாவதாகப் பதிவுசெய்யப்படும் பெண் வக்கீல் ஸ்ரீமதி தேவதாஸே, இங்கிலாந்து சென்று வக்கீல் பரீட்சைக்குப் படித்துப் பட்டம் பெற்றவள். பாரிஸ்டர் தந்தையின் பாரிஸ்டர் பட்டம் பெற்ற முதல் மகள். திரு வி. சிட்னி ஸிமித் அவளை ஒரு வக்கீலாகப் பதிவுசெய்யும்படி பிரேரித்து அவளுடைய திறமையைப் பாராட்டிப் பேசினர்.

தேக வியோகம்.

இத்தமீ ௧௫உ புதன்கிழமை பகல் 12 மணியளவில் சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ. விநாயகப்பெருமாள் அவர்களின் மனைவியும், அநுராதபுரம் கதிரேசன்கோயிற் பூசகர் ஸ்ரீ. மு. த. சிவப்பிரகாசக்குருக்கள் அவர்களின் மாமியுமாகிய இராசரத்தின அம்மாள் பிரசவத்தினால் உண்டாகிய நோய் காரணமாக இறந்துவிட்டனர். இறக்கும்போது வயது இருபத்திரண்டு. இவ்விளம்பிராயத்தில் இரு சிறுபிள்ளைகளையும் விடுத்து இவ்வுலக வாழ்வைநீத்தமை பெருந்துக்கமே. கடித.

படிக்கும் மாணவரைக் கெடுக்கும் வழிகளுக்குக் கிடைத்த மருந்து.

யாழ்ப்பாணம் கோப்பாய் அரசினர் போதனா வித்தியாசாலையிற் படித்துக்கொண்டிருந்த K காகசாதி விவாகம் செய்ததைப்பற்றியும், மேற்படி வித்தியாசாலையில் மாணவரை இனிமேல் நம்பிவிட முடியாதென்றும், 1928-ம் ஆ மாசிமீ 20உ வித்தியாகர்த்தர் துரையவர்களுக்கு விண்ணப்பப்பத்திர மனுப்பினேன்; அதற்கு மறுமொழியாக, யாழ்ப்பாணம் கோப்பாய் போதனாவித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் மேற்படி வித்தியாசாலையில் இருக்கும் காலம் வரைக்கும், விவாக ஒழுங்கு செய்தல் தடுக்கப்பட்டிருக்கிறதென்றும், பிரமாணத்தை மீறி அப்படிச் செய்யும் மாணவர் மேற்படி வித்தியாசாலையிலிருந்து விலக்கப்படுவார்களென்றும் மேற்படி வித்தியாசாலைக்கு அறிவித்திருப்பதாக, பங்குனிமீ 14உ எனக்கு அறிவித்திருக்கிறார்.

இங்ஙனம்,
ச. சிவதாசன்,
தெல்லிப்பழை.

நயினைத் தில்லையம்பல வித்தியாசாலைப் பழைய மாணவ சங்கம்.

நிகழும் விபவஞு ஆடிமீ 22உ (6-8-28) திங்கட்கிழமை மாலை 6½ மணியளவில் மேற்கூறிய வித்தியாசாலைப் பழைய மாணவ சங்க ஆரம்பவிழா, குறித்த வித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீ மு. பரமலிங்கம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயிற்று. பழைய புதிய மாணவர் பலர் வந்து அங்கனுங் குழுமினர். முன்னரே அதற்கென நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபையார் தாமாக்கி வைத்த சங்கப் பிரமாணங்களைச் சபைமுன் வாசிக்க, அவை சர்வசன அங்கீகாரமாயின. அப்பால் சங்க அக்கிராசனராக ஸ்ரீ ப. கந்தசாமி அவர்களும், உப அக்கிராசனராகத் தபாற்கந்தோர்த் தலைவர் ஸ்ரீ த. கார்த்திகேசு அவர்களும், கௌரவ காரியதரிசியாகக் குறித்த வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ச. கா. கந்தையா அவர்களும், உபகாரியதரிசியாக ஆசிரியர் ஸ்ரீ மு. நாகலிங்கம் அவர்களும், தனாதிகாரியாக ஸ்ரீ கா. சின்னத்துரை அவர்களும், கணிதபரிசோதகராக லிகிதர் ஸ்ரீ க. ஆறுமுகம் அவர்களுமாய இவருள்ளிட்ட பன்னிருவர் நிர்வாகசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டனர். இப் பழைய மாணவருளொருவரும், இலங்கைப் புகைரதப் பகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய ஸ்ரீ க. இராமச்சந்திரர் அவர்கள், சங்கங்களால் நாட்டுக்குண்டாம் நன்மைகளையும், நாம் தொண்டாற்றவேண்டிய முறைகளையும், நம் நாடு இதுபொழுதிருக்கும் ஈனஸ்திதியையும், ஒற்றுமையின் சிறப்பையும் நன்கு விளக்கியோர் சிறந்த குறிப்புரை நிகழ்த்தினர். காரியதரிசி சபைக்கு நன்றிகூறக் கூட்டம் தேவார பாராயணத்துடன் 10 மணியளவில் நிறைவேறிற்று. செவ்வாய்க்கிழமையாகிய மறுநாள் (7-8-28) மாலை 6½ மணியளவில் குறித்த வித்தியாலயத்தில் புலவர் ஸ்ரீ ச. நாகமணிப்பிள்ளை அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் தேவார பாராயணத்துடன் மீட்டுங் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீ க. இராமச்சந்திரர் அவர்கள் "கம்பரும் அவர் கவித்திறனும்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த ஓர் விரிவுரை நிகழ்த்தினர். பலர் குறிப்புரைகூறக் கூட்டம் தேவாரபாராயணத்துடன் 10 மணியளவிற் பூர்த்தியாயிற்று. கடித.

கல்மிதித்தல்.

சைவாபிமானிகளே! கல்மிதித்தல், அம்மி மிதித்தல், குழவி வைத்தலென இவ்விஷயங்களைப்பற்றிச் சுதேசநாட்டியத்திலும், இந்து சாதனத்திலும், சோதிடபரிபாலினியிலும் வெளிவந்ததைக் கண்டோம். இதைக்குறித்து நமக்குத் தோன்றியவற்றை வரைகின்றோம். விவாகசாலையிற் கல்யாணப்பெண் மிதிக்கக்கூடிய ஸ்திரமான கல் வைக்கவேண்டுமென்று நூல்களிலே விதிக்கப்பட்டதன்றி, அரைத்தற்றொழிலைச் செய்தற்குரிய கருவியாகிய அம்மி வைக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிலது, இவ்விஷயத்தில் அம்மியென்று வழங்கிவரும் பெயர் கல்லுக்கேயாம். அச்மா, சிலா என்னும் சொற்களும் கல்லுக்கேயன்றி அம்மிக்குப் பெயராகா. எங்ஙனமெனில்:—

நிகண்டில் சிலை என்பது கல்லின்பெயராதலாலும், சிலாவர்ஷம் என்பது கன்மழைக்கும், சிலாக்ஷரம் என்பது கல்லெழுத்திற்கும், சிலாதலம் என்பது கற்படிக்கும், சிலாமதம் என்பது கன்மதத்திற்கும் பெயராதலன்றி: அம்மியெனப் பொருள்படாமையாலும், சிலாதரன் [சக்திதேவர்பிதா] கன்மயமான மலைவடிவுள்ளவரென்றும், கந்தபுராணம் மேருப்படலம் 23-ம் பாடல் "சிலையெனப் பன்னுணின்ற வருந்திமாதும்" என்றதில், 'சிலையென கல்லைப்போல என்றும், ஷெ திருநகரப்படலம் 81-ம் பாடல் "அருஞ்சிலையிலிங்கம்" என்றதில், 'சிலை', 'இலிங்கம்' கல் சிவலிங்கமென்றும், ஷெ 91-ம் பாடல் "வியன்சிலை யொருபான்" என்றதில், 'சிலை' கல்லு என்றும் ஷெ 102-ம் பாடல் 'இங்கிலையன்றிச் சிலைகளும்" என்றதில் 'சிலை' கல்லென்றும் கூறியதெல்லாம் கல்லிற்குப் பெயராதலன்றி, அம்மியெனப் பொருள் படாமையாலும், திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம் "கல்லூர்ப்பெருமணம் வேண்டா" என்பதில் கல்லிலே கால் வைத்தல் என்றும், விவாக வூஞ்சல் 8-ம் பாடல் "கற்பினிற்சுவடிணிக்கல்லேயாவாய் கௌதமன்றன் மனைவியெனக் காட்டுமாபோல்" என்றதில், இக்கல்லேயாவாய் என்றும் சேர கல்லெனக் கூறியமையாலும், சிவானந்தலஹரி 8-ம் சுலோக உரையில் அச்மனி என்பதற்கு கல்லிலே என்றும் கூறியமையாலும், இவைகளெல்லாம் கல்லன்றி, அம்மியெனப் பொருள் படவில்லை. இன்னும் பொன்மணிகளைக் கோவைசெய்து அணியும்பக்ஷத்தில், மணியென்றும், தானம் செய்யும் விஷயத்தில், பொன்னுக்குப்பதிலாய் அம்மணியை வைத்துத் தானம் செய்யும்பொழுது அது பொன்னென்றும், பாக்கு வெட்டியைப் பாக்குவெட்டும்போது பாக்குவெட்டி யென்றும், அதை வேப்பிலையோடு சேர்த்துச் சிறு குழந்தைகளுக்குக் காவலாய் வைக்கும்போது அது இரும்பென்றும், ஒரு பொருள் இரு பெயராய் வழங்கவில்லையா?

அறிஞர்களே! இதுபோல் அம்மியென்னும் ஒரு பொருள், அரைத்தற்குரிய கருவியாகும்போது அம்மியென்றும், விவாகசாலையில் வைக்கப்படும்போது அது கல்லென்றும் வழங்குதல் தவறு? பொன்னாலானபொருள் பொன்னென்றும், இரும்பாலானபொருள் இரும்பென்றும், கல்லாலானபொருள் கல்லென்றும் இடம் நோக்கிப் பெயர் மாறுவதுபோல், விவாகசாலையில் வைக்கப்படும் அம்மிக்குக் கல்லென்றும் பெயரேஉண்மையாம். குழவியும் வைக்கும்படி நூல்களிலே கூறப்பட்டிலது.

M. A சண்முகம்.

நமது பெண்மணிகளும் மேல்நாட்டு நாகரீகமும்.

பண்டைக்காலந்தொட்டு இன்றுவரையுமுள்ள ஆண்பெண்பாலாரிருவரும் நமது மானிட ஜென்மமானது எத்தகைய சிறப்பு வாய்ந்ததென் றறிந்திருப்பார்கள். மானிட ஜென்மமெடுத்ததின் நோக்கம் பிறப்பென்னும் பெருங்கடலை நீந்தி இறைவனடியடைந்து பேரின்ப வாழ்வென்னு மின்பத்தை நுகர்தற் கன்றோ?

அவ்விதமான பேரின்பத்தை யாமடைய வேண்டுமாயின் நாம் துறவறத்தில் அல்லது இல்லறவாழ்க்கையில் உண்மையானநெறிநின்று ஒழுகல்வேண்டும். இவ்விரு வழிகளில் எது இலகுவானதென்னும் எளிதிலடையக் கூடியது மென்றாயின் அது இல்லறவாழ்க்கையே. ஏனெனின் துறவறம் நம்மெல்லோராலும் அநுசரிக்கக்கூடிய ஓர் வழியல்ல. உண்மையான துறவியொருவன் நாடுகடந்து காட்டுக்கேகி அவ்விடமே தனக்குச் சுகமென்றெண்ணிக் கடவுளது நினைவையே மனதில் கொண்டவனாயிருத்தல் வேண்டும். இவ்விதமான கஷ்டவழியை எம்பாலனேகர் நாடமாட்டார்கள். அவ்விதமானவர்களுக்கே இல்லறவாழ்க்கை உதவக்கூடும். எப்படியான இல்லறவாழ்க்கை யென்பதைப்பற்றிச் சிறிது யாராய்வாம். இல்லறவாழ்க்கையுள் இல்லானும் இல்லாளும் உலக இன்பத்திற்காகப் பாடுபடவேதம் வாழ்க்கையென்றெண்ணிஅதற்காகத் தம் வாழ்நாளை வீணாக்குவதல்ல. ஆனால் அவ்வாழ்க்கையெப்படியெனின் ஒருவன் தானொன்றியாகத் தன் தேசத்திற்காக அல்லது சமயத்திற்காகப் பாடுபடவோ அல்லது தனது ஆத்மாவை ஈடேற்றவோ முடியாதென்றெண்ணித் தனக்கு ஒரு துணையாளைத் தேடியவளுடன் ஜீவிக்கும் வாழ்க்கையே இல்லறவாழ்க்கை யெனப்படும். இனி இல்லானானவன் உண்மையான நெறி நின்று பொருளை யீட்டல் வேண்டும். அப்பொருளைக்கொண்டு உலகத்தோர்க் குதவி செய்து அதனால் வருமின்பத்தை யேற்று ஈற்றில் வீடு என்னும் பதவியை யடையவேண்டும். இதில் இல்லாளும் பங்குபற்றலாம். இன்னுமில்லாளானவள் தனது கணவனே தெய்வமென்றெண்ணி அவனுக்குரிய தொண்டுகளனைத்தையுந் தவறாது செய்தல் வேண்டும். இனி இவர்களிடந் தோன்றும் மக்களோ இவர்களனுசரித்த முறைகளைக் கடைப்பிடித்தொழுகத்தக்கவர்களா யிருத்தல் வேண்டும்; ஆகையால் ஒவ்வொரு இல்லானு மில்லாளும் உலகுக்குத் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய பல பிள்ளைகளைப் பெற்றெடுக்க விரும்புவதைவிடுத்துத் தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் ஓர் மகவையாவது தோற்றுவிப்பதே சாலவும் நன்றெனஅறிதல் வேண்டும். அதற்கு விசேஷமாக இல்லாளுடைய குணமே ஆதாரமாகும். எப்படியெனின் ஒரு குழந்தை தனது தாயினது உதிரத்தில் அதிகமாகப் பங்கு பற்றுகிறபடியினால் அக்குழந்தையினுடைய குணம் தாயினுடையதையே பொறுத்ததாகவிருக்கின்றது. ஆகவே தாயானவள் தான் அதிக விவேகியாயும், ஜீவகாருண்யம் பொருந்தியவளாயும் தேசபக்தி சமயபக்தி என்னு மிவ்விரு பக்திகளுந் தனது இருதய கமலத்திலே பொங்கி வடியப்பெற்றவளாயுமிருத்தல் வேண்டும். அவ்விதமிருந்தால் அவளிடமிருந்து தோன்றுஞ் சிசுக்களும் அக்குணங்களுடனே தோன்றும். அதனாற்றான்

" தக்கார் தகவில ரென்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும் "

என்றார் நாயனாரும்.

ஆனால் இந் நூற்றாண்டில் நடத்தப்படும் இல்வாழ்க்கையோ முன் குறிக்கப்பட்ட வாழ்க்கைக்கு மாறாகவே யிருக்கின்றது. இதற்கு அநேகமாய் நமது இல்லாளே காரணகாரியாயிருக்கிறாள். ஏனெனில் நமது பெண்மணிகள் மேல்நாட்டுநாகரீகத்தினுள்ளமிழ்ந்துபோனார்கள், அதனால் நமது பழைய நாகரீகத்தையுஞ் சீவிதத்தையுந் தடைசெய்யத் தலைப்பட்டுவிட்டார்கள். அதுமட்டோ! சிலர் ஆங்கிலேயம் படித்து உயர்தரக் கல்வியில் தேறவேண்டுமாம். தாமும் ஆண்கள் செய்யுந் தொழிலைச் செய்ய வேண்டுமென்று வீணாக உழலுகிறார்கள். இனி அவர்களது உடையென்றால் விவரிக்கக் கூசுகின்றது. சில பெண்கள் மேல்நாட்டாரைப் போலத் தாமுங் குளிர்தேசத்தில் வசிக்கிறோமென்றெண்ணித் தமது தேகத்தைச் சட்டைமேலங்கி முதலியவைகளால் மூடி வியர்வை சிந்தத் தவிக்கிறார்கள். இன்னொரு சாரார் தமது மேலங்கியை முழந்தாளுக்குமேல் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். மற்றொரு சாரார் தமக்கு அழகைக்கொடுக்குங் கூந்தலைக் கத்தரித்தெறிந்துவிட்டு அழகுபார்க்கிறார்கள். அந்தோ! இவர்களது செய்கை பூனை நரியைப் பார்த்துச் சூடுபோட்டாற் போலல்லவோ முடிகின்றது. இம்மட்டோ இவர்களது தொழில் இவர்களையு மிவர்கள் தேசத்தையு மன்னியமாக்கிவிடுமல்லவா? ஏனெனின் நம்மாண் பெண்பாலாரிருவரும் உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் ஆங்கிலேயத்திலென்றால் நம் தமிழ் நாகரீகத்தை யாதரிக்க யார்தானிருப்பார்கள். இப்படியாக இவர்கள் தம் சீவியத்தை உலக விஷயத்திலே ஈடுபடவிட்டால் இவர்கள் தாம் எப்படி உத்தமப்பேரின்பமாகிய அமிர்தத்தையள்ளிப் பருகப்போகிறார்களோ தெரியவில்லை. இனி இவர்களிடந் தோன்றுங் குழந்தைகளோ தாமுமந்நிய நாகரீகத்தைக் கையாண்டு வருகின்ற தாயானவளிடமிருந்து தோன்றிவிட்டோமென்றெண்ணி அவர்களுமந்நாகரீகத்துக்கே தங்களை விற்றுவிடுகிறார்கள். அதனால் அவர்களிடமிருந்து அவரது சுயமரியாதையும், சாதிபிமானமும் அற்றுப்போய்விடுகின்றன. ஆகையால் சகோதரிகளே! நுஞ்செய்கையானது, நும்மையும் நமது குழந்தைகளையும் மாத்திரமல்ல, நமது தேச உரிமையையுமிழக்கச் செய்கின்றது. நீங்கள் உங்களது இல்லானுக்கு அவனது பிறவியைத் தீர்க்க ஓர் ஊன்றுகோல்போ லிருப்பீர்களாக. நமதுமனம் நம்தேசத்தையுஞ் சமயத்தையுமன்புடன் நேசிக்கட்டும். அப்படியிருந்தால் உங்களது சிசுக்கள் உங்களைப்போலத்தோன்றித் தம்தேசத்துக்கும் சமயத்துக்குந் தொண்டர்களாயிருப்பார்கள். அப்படியிருந்தால் தான் உங்களது வாழ்க்கை கடவுளுக்கு உகந்ததாயிருக்கும். ஆகையால் சகோதரிகளே! மேலேசொல்லப்பட்ட நற்செய்கைகளுக்கு நீங்கள் ஈடுபட வேண்டுமென்று கடவுளைப் பூசிப்பீர்களாக.

மு. க.

ஏழாலை,
19—7—28.

விளம்பரம்.

யாழ்ப்பாணம் அரசாட்சியார் விறகு சாலைக்கு, கீழே குறிக்கப்பட்ட முடிக்குரிய காடுகளிலிருந்து விறகு கொப்பத்தக் கேள்விப்பத்திரங்கள் புரட்டாதிமீ 11உ செவ்வாய்க்கிழமை வரைக்கும் ஏற்கப்படும்:—

கிராஞ்சி	4500	தொன்விறகு
வெட்டுக்காடு	1000	,,
மன்னடக்கல்லார்	4500	,,

முழு விபரமும் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலகர் கந்தோரிலும் ஆவணிமீ 17உ வெளியாகும் 7659-ம் இலக்க கசற் பத்திரிகையிலும் அறிந்துகொள்ளலாம்.

J. D. SARGENT,
Conservator of Forests
வனபரிபாலனக்கந்தோர், } வனபரிபாலகர்,
கண்டி. 13-8-28
(G, 955)

1928-ம் ஆண்டு அனுப்பப்பட்ட இலங்கை அரசியல் திருத்த விசாரணைச் சங்கத்தார் வெளிப்படுத்திய அறிக்கை

இவ்விசேட விசாரணைச் சங்கத்தார் தமது அறிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளுள் விசேடமானவைகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றோம்.

௧. இதற்கு முன்னே இலங்கை அரசியல் முறையில் வழங்கிவந்த சட்டநிருபணசபை (Legislative Council) இனிக்குடியரசுச்சபை (State Council) என்ற பெயரினால் வழங்கப்பெறும். அது சட்டநிருவாகசபையின் (Executive Council) கடமைகளையும் சட்டநிருபணசபையின் கடமைகளையும் ஏற்றுக்கொண்டு நடத்திவரும்.

௨. இதற்குமுன் இலங்கை அரசாங்க லிகிதர் (Colonial Secretary) அவர்களின் ஆணையின்கீழ் கொண்டு நடத்தப்பட்டுவந்த இலங்கை அரசியற் பல பிரிவுகளும் இனிப் பத்துப்பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அவைகளில் ஏழுபிரிவுகள் சனங்களாற் தெரிவுசெய்து அனுப்பப்படும் குடியரசுச் சபைக்கு (State Council) அங்கத்தவராய் வருபவர்களில் ஏழுபேரின் தலைமையின்கீழ் நடத்தப்படும். அந்த ஏழுபேரும் மந்திரிமார் என்று அழைக்கப்படுவர்.

மேற்கூறிய ஏழுபிரிவுகளாவன:—

1. இலங்கைத் தன்னரசுமுறை Home Affairs
2. கமத்தொழில் Agriculture
3. கிராமச Local Administration
4. கல்வி Education
5. போக்குவரவு Communications
6. சுகாதாரம் Health
7. பகிரங்கவேலைப்பகுதி Public Works என்பனவாம்.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு பகுதியையுஞ் சார்ந்த குடியரசுச்சபை அங்கத்தவரையே தனக்கும் அங்கத்தவராய்க் கொண்ட ஒரு காரிய நிர்வாகசபை (Executive Committee) உண்டு.

௩. ஏனைய மூன்றுபிரிவுகளும் இலங்கை அரசாங்க லிகிதர் தனாதிகாரி (Treasurer) இலங்கைச் சட்டநூற்புலவர் Attorney General ஆகிய இம்மூவருடைய பொறுப்பின்கீழ் இருக்கும். இவர்கள் மூவரும் இனிக்குடியரசுச் சபை உத்தியோகஸ்தர் எனப்பெயர்பெறுவர். இவர்களுள் இலங்கை அரசாங்க லிகிதர் இனிப் பிரதமலிகிதர் என்ற பெயரால் அழைக்கப்படுவர்.

௪. மந்திரிமார் தங்கீழுள்ள பகுதிகளை ஆளும் பொழுது குடியரசுச் சபையாரின் கேள்விகளுக்குத் தனித்தனி மறுமொழி கொடுக்கும் பொறுப்புடையவராவர்.

௫. குடியரசுச்சபை உத்தியோகஸ்தராகிய மூவரும் தங்கள் பகுதிக்குரிய காரியங்களை நடத்துவதில் நிருவாக அதிகாரம் (Executive Powers) உடையவராவர். இவர்கள் தங்கீழுள்ள பிரிவினர்க்குப் பெரும் பாலும் ஆலோசனை சொல்லுபவராயிருப்பர்.

குடியரசுச் சபையின் தீர்ப்பின்படியே இவர்கள் தங்கள் தொழில் முறைகளைச் செய்வார்கள்.

௬. முன்னிருந்த சட்டநிருவாகசபை (Executive Council) இப்பொழுது முற்றாக நீக்கப்பட்டது. மேற்குறித்த பத்துப் பிரிவுகளின் மந்திரிமார் தம்முள்ளே ஒருசபையை நியமித்துக் காரியங்களை நடத்துவர். இவர் வருடாந்தக் கணக்கு வழக்கும் அனுபந்தக்கணக்கு வழக்கும் குறிக்கும் பத்திரங்களின் முழுப் பொறுப்பும் உடையவராவர். அச்சபைக்குப் பிரதமலிகிதர் அக்கிராசனராவர். ஆனால் அவருக்கும் மற்ற இரண்டு உத்தியோகஸ்தருக்கும் தெரிவுச் சம்மதி கொடுக்கும் உரிமையில்லை.

௭. உத்தம தேசாதிபதி அவர்களுடைய நிருவாக அதிகாரம் சிறிது குறைவாக, வேண்டுங்காலத்தில் கையாளத் தகுந்த வேறு அதிகாரங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன. காரியங்களைக் கொண்டு நடத்துவதைவிட அவைகளை மேற்பார்க்கும் அதிகாரமே அவருக்குப் பெரும்பாலும் உண்டு.

௮. 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் குடியரசுச் சபைக்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்யச் சம்மதி கொடுக்கும் உரிமை உடையராவர். தெரிவுச்சம்மதி கொடுப்பவர்களுக்குக் கல்வியறிவும் பொருள் வரும்படியும் வேண்டுமென்று முன்னே செய்திருந்த ஒழுங்கு இப்போது விடப்பட்டது. இப்போது கல்வியில்லாதவரும் பொருள் வரும்படி இல்லாதவரும் சம்மதி கொடுக்கலாம். ஆனால் தெரிவுச் சம்மதி கொடுப்போர் தங்கள் பெயர்களை முன்னேறிய பதிவு செய்வித்திருக்க வேண்டும். குறைந்த கணக்குக்கு ஐந்துவருடமாவது இலங்கையிலே வசித்தவராயிருத்தல் வேண்டும்.

௯. ஒவ்வொருசாதிப் பிரிவினர்க்கும் ஒவ்வொரு பிரதிநிதியை அவ்வப்பிரிவினர் தெரிந்தெடுத்து நியமிக்கும் வழக்கம் முற்றாக விடப்பட்டது.

௰. இப்போது உண்டாகும் குடியரசியற் சபைக்குச் சனங்களினாலே தெரிவுசெய்து நியமிக்கப்படும் அங்கத்தவர் 65 பேரும் தேசாதிபதி அவர்களால் வேண்டுமேல் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படும் கூடிய கணக்கு அங்கத்தவர் 12 பேரும் குடியரசுச்சபை உத்தியோகத்தர் மூவருமாகக் கூடிய தொகை 80 பேர் ஆவர்.

௧௧. 70 000 சனங்கள் தொடக்கம் 90,000 சனங்கள் வரையில் குடிசனமுடைய இடத்துக்கு ஒரு அங்கத்தவரைத் தெரிந்தெடுக்கலாம். குடியரசுச் சபைக்குப் பிரதிநிதிகளை அனுப்பும் பகுதிகளைச் சனத்தொகைக் கணக்குப்படி பிரித்துவைத்து ஒழுங்குசெய்வதற்கு இலங்கையிலே அவசியம் ஒரு சபை உண்டாக்க வேண்டும். இலங்கையில் உண்டாகும் சபையே பிரதிநிதிகளை அனுப்பும் பகுதிகளை ஒழுங்கு செய்யும்.

௧௨. குடியரசுச் சபைக்கு அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்படும் தகுதியுடையோர் 21 வயதுக்கு மேற்பட்டவராயும் ஆங்கிலக் கல்விப் பயிற்சி உடையவராயும் இருத்தல் வேண்டும்.

[illegible]. பிரதமலிகிதரின் பொறுப்பின்கீழ் வெளியூர்க் கருமங்களும் அரசியல் தற்காப்புக்குரிய கருமங்களும், சட்டங்களை முன்னேறி ஆலோசித்து அமைத்தலும் பகிரங்க உத்தியோகத்தரை நியமித்தலும் மாற்றுதலும் கணக்குப் பரிசோதித்தலும் அவர்களுடைய சம்பளங்களை அமைத்தலும் ஆகிய இத்தொழில்கள் அடங்கும்.

புத்திரபாக்கியமில்லாதவர்கள் நாகப்பிரதிஷ்டை செய்யும்விதி.

(தொடர்.)

நிம்ப பஞ்சாங்கம்.

நாலுவருஷஞ் சென்ற வேம்பின் வேர் பலம் (1), அம்மரத்தின் பட்டைபலம் (2), இலைபலம் (3), வேப்பம்பூ பலம் (4), வேப்பம்வித்து பலம் (5), இந்த நிறைப்படி எடுத்து வெய்யிலிற் காயவைத்து இடித்து (36) தரம் வஸ்திரகாயஞ்செய்து புது மண்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு நாளும் வெருகடிப் பிரமாணமாகச் சிலநாளைக்குத் தேனிலும், சிலநாளைக்குச் சர்க்கரையிலும், சிலநாளைக்குப் பசுவின் பாலிலும், சிலநாளைக்குப் பசுவின் நெய்யிலும், சிலநாளைக்குத் தயிரிலும் இப்படி இங்கே சொல்லிய பஞ்சாமிர்தத்திலும் முறையே உட்கொண்டு வந்தால் காயசித்தியாம், வாத பித்த சிலேஷ்ம தோஷங்கள் நீங்கும் இந்திரிய பெலனுண்டு, சந்தான விருத்தியாகும், ஏனைய சகல ரோகங்களும் நீங்கும், அபபத்தியமாகவு முண்ணலாம்.

வேப்பமரத்தின் குணம்.

ஓதரிய வேம்பை யுரைக்கி லசமுடனே
வாதமறு மூலகண மந்தம்போம்—தீதாய்
உதிருமெரி பூச்சிகுன்ம மோதா தொழியுஞ்
சிதமுமலம் போகுமெனத் தேர்

வேப்பிலையின் குணம்

கிருமிகுஷ்ட மாந்தங் கெடுவிடஞ்சு ரங்கள்
பொருமியரு சிகளையின் புண்கள்—ஒருமிக்க
கிம்பத்திலையிருக்க நீடுவடி வீங்காமற்
கம்பத்திலையிருக்கக் காண்.

வேப்பம் பூவின் குணம்.

பித்தத்தெழுந்தபெரு மூர்ச்சைகாத் தோஷஞ்
சத்தத்தெழுவ மனைதங்கருசி—முற்றியகால்
ஏப்பமலகிடை மிலையேகு நாட்சென்ற
வேப்பமலருக்கு வெருண்டு

வேப்பம் வித்தின் குணம்.

வேம்பின்விதைக்கு விஷஞ்சன்னிபாதமுதல்
தேயபிணிமூச் சோடுமெனத் தேர்.

இவைகளினால் வேம்பு மிக விசேஷமுடைய தாகும் என்பதை யறியக் கடவர்கள். திருக்கழுக்குன்ற புராணத்தில்,

ஆதியில் வருணரு மவர்தம் மாதரும்
போதியும் வேம்புமு மெனு வ போக்கினர்
சாதியை விழைந்தினர் தாழைப்பாலையைக்
காதிய கருவியர் பலக்கடப்பரோ.

என்னும் பிரமாணப்படி அரசமரம் பிராமணனும் வேப்பமரம் பிராமணப் பெண்ணுமாவர் என்பது பற்றி இந்த அரசு வேம்பு இரண்டிற்கும் விவாகஞ் செய்துவைத்தல் புண்ணியமென்றே சாஸ்திரங்கள் கூறும். இல்லாதவர்கள் இந்த இரு விருட்சத்தின் வழிபாட்டினால் மெலிந்து துன்புற்றவர்கள் வேம்பு அரசு இவை நின்றிருந்து வருங்காற்றினால் நன்மையை அடைந்திருக்கின்றனர் என்பதை எல்லாரும் மதித்திருக்கின்றார்கள்.

இனி அரசமரத்தைப்பற்றி ஆராய்வோமேயானால் அரசமரத்தில் [illegible] மின்சாரமிருக்கின்றன. நோயினால் துன்பப்பட்டுச் சுகமடைந்து வருபவர்களும், சரீரமும் மனமும் மெலிவடைந்திருப்போரும் காலை மாலையாகிய இரு நேரங்களிலும் சுத்தமான நீரில் ஸ்நானஞ் செய்து அரசமரத்தைப் பிரதக்ஷணஞ் செய்வதை நாம் பன்முறை கண்டிருக்கின்றோம். அவர்கள் அப்படிச் செய்வதால் நாளுக்குநாள் சுகம் பெறுவதையுங் காண்கின்றோம். இதற்குக் காரணம் இவ்விருட்சத்திலிருந்து வருங் காற்றேயாம். பிரமசரிய விரதத்தைக் குற்றமின்றிக் காத்து நல்லொழுக்கத்தில் நிலைத்து விளங்கும் ஒருவன் பிராமத்துவ நிலையினால் உயிர்நீப்பின் அவனே அரசமாய்ப் பிறக்கின்றான் என்றும், இதுபற்றியே இவ்வரசிற்கு இடதுபக்கத்தில் நாகப்பிரதிஷ்டை செய்துவைத்து அசுவத்த விவாகமும் செய்துவைத்தவர்களுக்குப் புத்திரப்பேறுண்டாகுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

புத்திரப்பேற்றை விரும்புகிறவர்கள் இரண்டு சர்ப்பங்கள் ஒன்றோடொன்று இணைந்து சுற்றிக்கொண்டிருப்பது போலச் செய்வித்துப் பிரதிஷ்டை செய்தாற்றான் புத்திரப்பேறுண்டாகுமென்று பெரியோர் சொன்னார்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

இலக்கம் 6

அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

பொதுவான ஆகாரப்பொருட்கள், அவைகளின் சுகபோஜனத்திற்குரிய குண குணங்கள்.

முற்றொடர்.

உலகத்திலுள்ள குடிஜனங்களில் அரைவாசிக்குமேல், பிரதானமாய் ஆசியாக் கண்டத்திலுள்ள ஜனங்களுக்கு அரிசிதான் முக்கியமான தானிய உணவாயிருக்கின்றது. பண்டைக்காலத்தில் இந்த அரிசியை ஜனங்கள் துலக்காமல் அதின் இயற்கையாயுள்ள வெப்பநிலைமையில் தான் சமைத்துச் சாப்பிட்டு வந்தார்கள் என்பதற்குக் கொஞ்சமேனும் ஐயமில்லை. இக்காலத்தில் கோதுமைக்குச் செய்வதுபோல அரிசியிலுமுள்ள அரும்புகளையும் தவிட்டையும் எடுத்துவிடுகிறார்கள். இதனால் அரிசி பார்க்கவடிவாயிருந்தாலும் அதிலுள்ள போஷிப்புக்குரிய சத்துக்கள் எடுபட்டுப்போய் விடுகின்றன. தற்காலம் வெள்ளை நிறமுள்ள அரிசியில் விருப்பம் ஏறக்குறைய ஒரு பழக்கமாய் வந்துவிட்டது. சரியான ஆகாரப் பொருட்களைத் தெரிந்தெடுக்கிறதற்கு உதவியாயிருக்கும் மனிதனுடைய தற்சுபாவமும் அழிந்து போகிறதற்கு அத்தாட்சி என்னவென்றால் அவனுக்கு வெண்மை நிறமுள்ள அரிசிகளிலும் வெண்மை நிறமுள்ள மாவுகளிலுமிருக்கும் செயற்கையால் உண்டுபட்ட ஆசைதான். அரிசியை வெண்மையாக்குகிறதினால் வியாபாரம் மெத்தச் சித்தி அடைந்து கொண்டு வருகிறபடியால் அதை இன்னும் நல்லாய் வெண்மையாக்குகிறதற்குச் செயற்கையான பல வழிவகைகளையும் தேடிக்கொள்ளுகிறார்கள். மினுக்கின அரிசியில் சுகபோஜனத்திற்கு வேண்டிய பலவிதமான தன்மைகள் குறைவாயிருக்கின்றன. இதில் "புறட்டேயின்ஸ்" சினைகளும், ஆகரிவஸ்துக்களில் முக்கியமாய்க் "கல்சியம்" என்னும் சுண்ணும்பும், பிரதானமாய் "விற்றமின்ஸ்"களும் மிகக்குறைவாயிருக்கும். சோறுதான் ஜனங்களுடைய பெரும்பாகமான சாப்பாடாயிருக்கிறபடியால் பசிநோயைத் தணித்துக்கொள்ளுகிறதற்கு அதை ஏராளமாய்ச் சாப்பிடவேண்டியதாயிருக்கிறது. தேகதிடமும் வளர்ச்சியு முண்டுபடுகிறதற்கு அத்துடன் ஏராளமான பால், இலை மரக்கறிகள், மாமிசங்கள் முதலிய பலவிதமான உணவுகளையும் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

பச்சை மரக்கறிப் பதார்த்தங்கள் சுகபோஜனத்திற்கு மிகவும் முக்கியமானவை. அவைகளில் பெருந்தொகையான "கார்போகயிட்றேற்ஸ்" (Carbohydrates) "புறட்டேயின்ஸ்" (Proteins), ஆகரிவஸ்துக்கள் (Mineral elements), "விற்றமின்ஸ்" (Vitamins) முதலியவைகளிருக்கின்றன. இவைகள் மாத்திரமல்ல புளிப்புகளினால் வரும் கெடுதிகளை நிவிர்த்தி பண்ணும் காரங்களும் தேகத்தில் உண்டுபடுகின்றன. மரக்கறி வர்க்கங்களில் இலையுள்ள பாகங்கள் மிகவும் முக்கியமானவை. ஏனென்றால் அவைகளில் ஆகரிவஸ்துக்களும் முக்கியமாய் "கல்சியம்" (Calcium) என்னும் சுண்ணும்பும் "விற்றமின்ஸ்"களும் ததும்பிக் கிடக்கின்றன. பாலைப்போல இலைக்கறிப் பதார்த்தங்களும் சாதாரணமான உணவுகளினால் வரும் குறைவுகளை நிவிர்த்தி பண்ணும். பால்சேராத உணவுகளிலிருக்கும் குறைவுகளை பச்சை இலைக்கறி உணவுகள் நிவிர்த்திபண்ணி விடும் என்று அதிகம் திடமாய்ச்சொல்ல முடியாது. பால் முக்கியபாகமாய்ச் சேராமலிருக்கும் கிழக்குத் தேசவாசிகளின் போஜனங்களில் இந்த இலை மரக்கறிகள் தான் குறைகளை நிவிர்த்திபண்ணி ஈடேற்றும் இயல்புள்ளதாயிருக்கின்றன.

உருளைக்கிழங்கு, ரேணிப் கிழங்கு, காரெட்டுக்கிழங்கு முதலிய கிழங்குவகைகள் போஜனத்திற்குரிய குணநலன்களில் ஒரேதன்மையுடையவை. அவைகளில் பசைமாத்திரம் (Starch) அதிகமாயிருக்கும். "புறட்டேயின்ஸ்" சினைகள் ஆகரிவஸ்துக்கள் "விற்றமின்ஸ்"கள் மிகச் சொற்பமாய்த்தானிருக்கும்.

பழவகைகளில் அதிகம் தண்ணீரும் பெருந்தொகையான சர்க்கரையும் (Sugar) இருக்கும். "புறட்டேயின்ஸ்" சினைகளும் கொழுப்புகளும் வருவிக்கிறதில் தலைமையாயுள்ளவைகளல்ல. இவைகள் மரக்கறிப் பதார்த்தங்களைப்போல உடம்பில் காரம் உண்டாக்குகிறதற்கு முக்கியமானவை. எலுமிச்சம்பழங்கள், தோடம்பழங்கள் முதலிய சிதலையான பழங்கள் "விற்றமின்" (Vitamin B)ம் புளிப்புள்ள "விற்றமின்" சத்துகளும் தேகத்திலுண்டுபட விடாமல் தடைபண்ணுவதில் விசேஷமுள்ளவை.

தசை நரம்புகள் கோழிக்குஞ்சு, மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி முதலிய மாமிசபோஜனங்களிலிருந்து உண்டாகின்றன. அயம்சேர்ந்த வஸ்துக்களையும், காடிக்காதையும், "புறட்டேயின" சினைகளையும் விர்த்திசெய்வதில் இந்தச்சதை நரம்புக்கட்டுகள் விசை நரம்புள்ள அங்கக்கட்டிலும் பார்க்க விசேஷமான தென்பதை நாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் விசை நரம்புகளுள்ள அங்கக்கட்டுகளில் ஜீவியத்தை நீடிக்கப்பண்ணும், "புறட்டேயின்" சினைகளும் "விற்றமின்ஸ்" (Vitamins A&B) களும் போதியளவு இருக்கின்றன. இறைச்சிகளிலிருந்து எடுக்கப்படும் சத்துகள், சாறுகள், தைலங்களைப்பற்றி இங்கே கொஞ்சம் சொல்லுவது உபயோகமுள்ளதாயிருக்கும். ஜனங்கள் இவ்விதமான உணவுகளின் பெறுமதியை ஒருவேளை கணக்குக்கு மிஞ்சி மதிப்பிடக்கூடும். இவைகள் இறைச்சியல்ல; இறைச்சியிலிருந்தெடுக்கப்பட்ட சாரங்கள் மாத்திரம்தான். இவைகள் தேகத்தில் ஒருவிதமான அருட்சியைக் கொடுக்கிறதற்கும் ஆகாரங்கள் சமித்துப் போகிறதற்கு உதவியாயிருக்கிறதே யொழிய வயிற்றுக்குப் போதியளவு உணவுகளாயிருக்க மாட்டாது. ஆனால் இவைகளில் ஆகரிவஸ்துகள் நிறைய இருக்கின்றன.

தேகத்தைக் காப்பாற்றவும் வளர்க்கவும் முட்டைகளில் போதியளவு சத்துகளிருக்கின்றன. ஆனால் அவைகளில் "கார்போகயிட்றேற்" என்னும் பசைமாவும் சர்க்கரையும் சேர்ந்த வஸ்துக்களும் "கல்சியம்" என்னும் சுண்ணும்பும் கிடையாது. முட்டைகளில் கொழுப்பும் "விற்றமின்ஸ்"களும் நிறையவிருக்கின்றன. அவைகளிலிருக்கும் "புறட்டேயின்ஸ்" சினைகள் மிகவும் விசேஷமானவை. அவைகளில் அயம் சேர்ந்த வஸ்துக்கள் மிச்சமிருக்கின்றன. சிறுவயதில் முட்டைகள் பாவித்து வந்தால் இந்த அயத்திராவகம் முக்கியமாயுண்டுபடுகிறதற்கு ஏதுவாயிருக்கும்.

இந்தக்கட்டுரையை மரக்கறிபோஜனத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லிமுடிப்பது இனிதாயிருக்கும். இரண்டுவிதமான மரக்கறி போஜனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்று எவ்விதமான மாமிச உணவும் சேர்படாத போஜனம். மற்றது, பால், முட்டைகளும் பாவிக்கப்படும் போஜனம், மாமிசம் சேர்ந்தவும் மாமிசமில்லாதவும் போஜனங்களில் எது விசேஷம் எது குறைவு என்பதைப்பற்றி அதிகம் வாக்குவாதம் பண்ணுமல் சில வெளிப்படையான உண்மைகளை இங்கு சொல்லுகிறோம். மாமிச போஜனத்திற்கு மாறுகச் சொல்லப்படும் அநேக நியாயங்களில் ஆக உறுதியான நியாயமென்ன வென்றால் மாமிசம் சுகத்திற்குத்தகாததும் தேகபலத்தைப் பாழாக்கும் கெடுதியான வஸ்துக்களையும் வருவிக்குமென்பதே, மாமிசம் புசித்து நல்லாய் அநுபவப்பட்டவர்கள் இந்த நியாயத்தைக் கைக்கொள்ளுகிறார்களில்லை. முற்றுமுழுதாய் மரக்கறிவகைகளால் ஒரு நியாயமான திருப்தியுள்ள உணவை புண்டுபண்ணலாம். ஆனால் அது இலேசான காரியமல்ல மரக்கறி போஜனத்தைத் திருப்தியுள்ள தாக்குகிறதற்குப் பெருந்தொகையான இலைக்கறி உணவு சேர்க்க வேண்டும். ஆனால் பெருந்தொகையான இலைவர்க்க உணவுகளை மனிதனால் சாப்பிட முடியாது. பாலையும் முட்டையையும் இந்த மரக்கறி போஜனத்துடன் சேர்த்துக் கொண்டால் மெத்தத் திருப்தியான போஜனமாகிறது. இத்துடன் கொஞ்ச இறைச்சி வகைகளையும் சேர்த்துக்கொண்டால் மரக்கறிபோஜனத்தின் விசேஷம் இன்னும் அதிகப்படும்.

சாமான்கள் கொடுத்தற்குக் கேள்விப்பத்திரம்.

நார்க்கடகம், ஓலைப்பாய், ஓலைஉமல், பனைஓலை, தும்புக்கட்டு, ஈத்துக்கட்டு, கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்ட நேரமே யாழ்ப்பாணம் உப்புமால், சிவியாதெரு உப்பளம், தொண்டைமனுர் உப்புச்சுகம் ஆகிய இந்த இடங்களில் கொடுக்கிறதற்கு 1928-ம்௵ ஐப்பசி௴ 1௳ தொடக்கம் 1929-ம்௵ புரட்டாதி௴ 30௳ வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப்பத்திரம் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இரண்டுபிரதியாகவும் முத்திரை யிடப்பட்டதாயு மிருக்க வேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசண்டுத் துரை அவர்களுக்கும் இரண்டாம்பிரதி கொழும்பு அரசிறை வருமானத் தலைவர் கந்தோருக்கும் விலாசம்போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானுகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம் இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் Tender for Furnishing Materials 1928-29 என்று உறையின் இடதுபக்க மேல்மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1928-ம்௵ புரட்டாதி௴ 4௳ பிற்பகல் 2 மணிக்கு முன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக் கடதாசி யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். அந்தமாதிரிக் கடதாசியில் எழுதாத வேறு எவ்வித பத்திரமும் ஏற்கப்படமாட்டாது, மாற்றங்களுக்குக் கையொப்ப முதலெழுத்துக்க ளிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் பிழையென விலக்கப்படும்.

6. முழு விபரங்களும் இந்தக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1928-ம்௵ ஆவணி௴ 2௳.

டபுள்யூ. ஸி. டி. பெந்தலோ,
அரசாட்சி ஏசன்றுக்காரர்.

(G. 954)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறை
விலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்க
ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மை
கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan
for and on behalf of the Proprietors, the Jaffna
Saiva Paripalana Sabai, at their Press, the
Saiva Prakasa Press, Vannarpannai.